[27th December 1956

Issue of printed receipts by village officers

* 437 *Q.*—SRI V. BALAKRISHNAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to question No. 3221 on 2nd March 1956 when the system of issuing printed receipts with counterfoils to the public for payments made to village maniyams will be introduced?

THE HON. SRI M. A. MANICKAVELU: Orders have already been issued in G.O. No. 2784, Revenue, dated 13th July 1956, prescribing the form of receipt and also directing that the receipts should be in a book form, that they should be written in triplicate, one original and two carbon copies and that double-sided carbon papers should be used for taking the copies. The Board is taking action to print and supply the necessary forms to the village headmen in the districts. This new system will begin in the districts shortly.

SRI M. KALYANASUNDARAM: கிராம மணியக்காரர்களால் வசூலிக்கப்படும் நில வரி உட்பட சகல தொகைக்கும் அச்சடிக்கப்பட்ட ரசீதுகள் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: கிஸ்து செலுத்துவதற்கும் இம்மாதிரி ரசீது உண்டு. மற்ற இனங்களுக்கும் இதே ரசீது தான். ஆரம்பத்திலே கிஸ்து செலுத்துவதற்கு ரசீது கொடுப்பதை ஆரம்பிக்கிறோம். மற்ற இனத்திற்கும் இதே முறைதான் வரும்என்று நினைக்கிறேன்.

SRI S RAMALINGAM: ரசீது புத்தகங்களெல்லாம் எந்த அச்சகத்திலே அச்சடிக்க சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள் ? ஏன் இப்படிக் கேட்கிறேன் என்றால், பல ஸ்தாபனங்களுக்குத் தேவையான " பாரங்கள் " வெகு நாட்களாகக் கிடைப்பதில்லை என்ற புகார் சொல்லப்படுகிறது. ஹோ அண்டு கம்பெனிக்கு உத்தரவிட்டிருந்தால் ரசீது புத்தகங்கள் வந்து சேருவதற்கு இன்னும் ஒரு வருஷத்திற்குமேல் ஆனாலும் ஆகலாம். அடுத்த வருஷ கிஸ்தி வசூல் காலத்திலேயே அச்சடித்த ரசீது கொடுக்கக் கூடிய முறையிலேயே பல அச்சகங்களிலே இந்த ரசீது புத்தகங்களை அச்சடிக்க " ஆர்டர் " கொடுத்து, எல்லா கிராமாதிகாரிகளுக்கும் விநியோகிக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: உடனடியாக அமுலுக்குக் கொண்டுவருவதற்காக என்னென்ன பிரயத்தனங்கள் எடுத்துக்கொள்ள முடியுமோ அந்த பிரயத்தனங்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

SRI K. ARANGANATHAN: நமது அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, " உடனடியாக " என்று குறிப்பிட்டது திட்டமாக இல்லாததால், வரப்போகிற ஜனவரி மாத வரி வசூலின்போதே இப்படிப்பட்ட அச்சடிக்கப்பட்ட ரசீதுகள் கொடுப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: உடனடியாக வரலா என்றுதான் நானும் நம்புகிறேன்.

Shifting of the Legislative Assembly to Fort St. George

* 438 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to the answer given to question No. 3422 (starred) on 15th March 1956,